25.02.2022
O.S.No.107/2019

பி.வா. சா. 1 ராஜாங்கம் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

தாவாச் சொத்தின் டி.எஸ்.1954/1 க்கு கட்டுப்பட்ட 7 ஏக்கர் 30492 சதுரடியைக் கொண்டது என்றால் சரிதான். மேற்படி சொத்து ஆதியில் லட்சுமணக் கோணார் மற்றும் அவரது சகோதரர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். ராமக்கோணார் மக்கள் லட்சுமண கோணார், ஆறுமுக கோணார், வெள்ளைச்சாமி கோணார், கருப்பணக்கோணார், சந்தனக்கோணார் என்ற மூக்கக் கோணார், பழனியாண்டிக்கோணார் ஆக 5 பேர்கள். மேற்படி 5 பேருக்கும் தலா 1/5 பாகம் உள்ளது என்றால் சரிதான். லட்சுமணக்கோணார் பேரில் ஆண்டியப்பபிள்ளை மு.வ.11/1937 என்ற வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. ஆண்டியப்ப பிள்ளை லட்சுமணக்கோணாரின் 1/5 பாகத்தை பிரித்து பெற பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் அந்த பாகத்தை பிரித்து பெற மு.வ.11/37 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அந்த வழக்கு தீர்ப்பாகி 1/5 பாகத்தை ஆண்டியப்ப பிள்ளை நீதிமன்றம் மூலமாக இ.பி.427/1940 ல் ஒப்படைப்பு பெற்றார் என்றால் இல்லை. ஆண்டியப்ப பிள்ளை 1/5 பாகத்தை ஒப்படைப்பு பெற்ற பின்னர்தான் லட்சுமணக்கோணாரும் மற்றவர்களும் பல ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஒப்படைப்பு தேதிக்கு பின்னிட்டது என்றும் எனவே அந்த ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. ஒப்படைப்பு பெற்ற சொத்தை ஆண்டியப்ப பிள்ளை முறையாக அனுமதி பெற்று மனைகள் பிரித்து கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அப்படி ஒரு அப்ரூவல் வாங்கவில்லை. வாதி தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மையானவை அல்ல. மு.வ.279/2014, 219/2015, 28/2017 ஆகிய வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்புகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்குகளில் வாதி தரப்பினராக இல்லை என்றால் சரிதான். மேற்படி 3 வழக்குகளும் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டவை என்றால் சரிதான். மு.வ.219/2015 வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ள ஜெயராமின் தகப்பனார் பெயர் சந்தனம் ஆவார். மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் வாதி ஆகியோர்களின் முகவரி ஒரே முகவரியாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதி

மற்றும் பிரதிவாதிகளின் முகவரி ஒரே முகவரியாக கண்டுள்ளது என்றால் சரிதான். தற்சமயம் அவர் திருச்சியில் உள்ளார் என்று கண்டுள்ளது. அவர் என் உறவினர் என்றால் அவர் தூரத்து சொந்தம். மு.வ.219/2015 வழக்கை நானும் பிரதிவாதிகளும் ஒரே முகவரியில் குடியிருந்து வந்ததால் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கை ஒருதலைப்பட்சமாக விட்டு தீர்ப்பு பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் தற்போதைய ச.எண்.55, மற்றும் 56/1 ஏ 1 ஆகும். மு.வ.28/2017 வழக்கு இந்த வழக்கு சொத்து சர்வே எண் சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரிதான். பிவாசாஆ.20 வழக்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. முத்துலட்சுமியம்மாள் தாக்கல் செய்த மு.வ.407/1960 வழக்கில் நானும் என் வகையறாக்கள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் ஆண்டியப்ப பிள்ளை ஒரு தரப்பினர் என்றால் சரிதான். முத்துலட்சுமியம்மாள் தாவாச்சொத்துக்கு அருகில் இருந்தார் என்றும் அந்த வழக்கு தாவா சொத்து சர்வே எண் சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரிதான். தாவாச்சொத்துக்கு பட்டா என் பேரில் இல்லை என்றால் சரிதான். திண்டுக்கல் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.468/2016 தாக்கல் செய்து வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். தற்போது திரும்ப எடுக்க மனு கொடுத்துள்ளேன். தாவாச் சொத்தில் எனக்கோ என் முன்னோர்களுக்கோ உரிமையும் அனுபவமும் இல்லை என்றும் மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றும் வாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதி சரியான பிரதிபிரயோஜனத்தின் படி சொத்தை கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும் நாங்கள்தான் அவருக்கு இடைஞ்சல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பொய் எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

M K JAMUNA
Digitally signed by M K JAMUNA
Date: 2022.02.25 15:40:14 +0530

Prl.Sessions Judge,
Dindigul